𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ மஹாபாரதம்

## மௌஸலபர்வம்

### முதலாவது அத்யாயம்.

[1] 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌨𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 ।
𑌦𑍇𑌵𑍀𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑌤𑍋 𑌜𑌯𑌮𑍁𑌦𑍀𑌰𑌯𑍇𑌤𑍍 ॥

**(யுதிஷ்டிரர் உத்பாதங்களைக் கண்டதும், பிறகு பலராமகிருஷ்ணர்களின் முக்தியையும் யாதவரனைவரும் உலக்கையாலடித்துக்கொண்டு மிச்சமின்றி மாண்டதையும் கேட்டதும்.)**

வைசம்பாயனர், "பிறகு, கௌரவநந்தனரான யுதிஷ்டிரர் தாம் பட்டத்துக்குவந்த முப்பத்தாறுவது வருஷம் வந்தவுடன், விபரீதமான நிமித்தங்களைக் கண்டார். இடியோடுகூடினவைகளும் கடுமையாயிருக்கின்றவைகளும் பருக்கைக்கற்களைப் பொழிகின்றவைகளுமான காற்றுக்கள் வீசின. பறவைகள் அபஸவ்யமான மண்டலங்களைச் செய்தன. மஹாநதிகள் மேற்கு முகமாகச் சென்றன. திசைகள் பனியினால் மூடப்பட்டன. கொள்ளிகள் தழலைப்பொழிந்துகொண்டு ஆகாயத்தினின்று பூமியில் விழுந்தன. ராஜரே! ஸூரியன் தினந்தோறும் உதய காலத்தில் புழுதியினால் நன்குமறைக்கப்பட்ட மண்டலமுள்ளவனும் கிரணமற்றவனும் தலையற்ற உடல்களால் அலங்கரிக்கப்பட்டவனுமாக இருந்தான். சந்திர ஸூரியர்களுக்குப் பயங்கரமானவைகளும் மூன்று நிறங்களுள்ளவைகளும் கறுத்த க்ரூரமானமுனையுள்ளவைகளும் பஸ்மம்போலவும் சிவப்பாகவும் இருக்கும் ஒளியுள்ளவைகளுமான பரி

1. இதன் உரைவிசேஷங்களை ஆதிபர்வம் முதற்பக்கம் குறிப்பில் காண்க

வேஷங்களும் காணப்பட்டன. சிறந்தபாக்யமுள்ளவரே! குற்றமற்றவரே! ஜகந்நாதரே! எந்த வாஸுதேவருடைய அனுக்ரகத்தினால் இந்தத் தர்ம மானது கிருதயுகத்திலிருந்ததுபோலக் கலியுகத்திலுமிருந்ததோ, பாண்டவர்களும் புகழ்பெற்றனரோ, அவர் பரமபதம் ஏறவிரும்பின பொழுது, பயத்தைத்தெரிவிக்கின்ற இவைகளும் மற்றும் அனேகங்களுமான உத்பாதங்கள் காணப்பட்டன. (துர்நிமித்தத்தைக்கண்டு) பயந்தவரும் கௌரவராஜருமான அந்த யுதிஷ்டிரர் சிலகாலம் சென்றபிறகு, விருஷ்ணிகளுடைய கூட்டமானது உலக்கையால் கொல்லப்பட்டதென்றும் வாஸுதேவரும் பலராமரும்மட்டும் விடப்பட்டார்களென்றும் கேள்விப்பட்டுப் பிராதாக்களை அழைத்து, 'என்ன செய்வோம்?' என்று சொன்னார். விருஷ்ணிகள் பிராம்மணசாபத்தால் தூண்டப்பட்டு ஒருவரையொருவர் எதிர்த்து மடிந்தார்களென்று கேள்வியுற்று அந்தப் பாண்டவர்கள் மிக்கமனவருத்தம் அடைந்தனர். (பாண்டவ) வீரர்கள் சார்ங்கமென்னும் வில்லையுடையவரான கிருஷ்ணபகவான் மரிப்பதென்பது 'ஸமுத்ரம் வற்றியதுஎன்பது போன்றது' என்று அவருடைய மரணத்தை நம்பவில்லை. அந்தப் பாண்டவர்கள், (விருஷ்ணிகள்) உலக்கையினால் கொல்லப்பட்டனரென்பதை உள்ளத்தில் நினைத்துத் துக்கமும் சோகமுமுள்ளவர்களும் வாட்டமுற்றவர்களும் மனத்தில் (வேறு) பிரவிருத்தியற்றவர்களுமாக உட்கார்ந்திருந்தனர்'' என்று கூறினார்.

## இரண்டாவது அத்யாயம்.

——:o:——

(விஸ்வாமித்ரர் முதலியோர் துவாரகைக்கு வந்ததும், யாதவர் சிலர் கர்ப்பிணி வேஷம் பூண்ட ஸாம்பனுக்கு என்ன பிறக்குமென்று அம்முனிவரைக் கேட்டதும், அவர்கள் யதுகுலத்தை அழிக்கும் இருப்புலக்கை பிறக்குமென்று சபித்ததும், உலக்கை பிறந்ததும், யாதவர்கள் அதனைப் பொடியாக்கிக் கடலில் கொட்டியதும்.)

ஜனமேஜயர், "பகவானே! வாஸுதேவர் பார்த்துக்கொண்டிருக்கும்போது, அந்தகர்களும் விருஷ்ணிகளும் மஹாரதர்களான போஜர்களும எவ்விதம் அழிந்தனர்?'' என்று வினவினார். வைசம்பாயனர், "முப்பத்தாறாவது வருஷம் வந்தவுடன், விருஷ்ணிகள் பெரிய குற்றத்தைச் செய்தனர். (அதனால்) அவர்கள் காலத்தால் தூண்டப்பட்டு

ஒருவரை யொருவர் உலக்கைத் துணுக்குக்களால் அடித்துக்கொண்டனர்" என்று சொன்னார்.

ஜனமேஜயர், "பிராம்மணச்ரேஷ்டரே! வீரர்களான அந்த விருஷ்ணிகளும் அந்தகர்களும் போஜர்களும் எவரால் சபிக்கப்பட்டு நாசத்தை அடைந்தார்கள்? நீர் இதனை எனக்கு விரிவாகச் சொல்லும்" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார். "ஸாரணனை முதன்மையாகக்கொண்ட வீரர்கள், விச்வாமித்திரரும் கண்வரும் தபோதனரான நாரதரும் துவாரகைக்கு வந்திருப்பதைக் கண்டு, அவர்கள் தெய்வத்தின் ஆஜ்ஞையினால் பீடிக்கப்பட்டவர்களாகி ஸாம்பனை ஸ்திரீயைப்போல் அலங்கரித்து முன்னிட்டுக்கொண்டு அம்முனிவர்களிடம் சென்று, 'ரிஷிகளே! இவள் புத்திரனை விரும்புகின்றவனும் அளவற்ற தேஜஸுள்ளவனுமான பப்ருவினுடைய மனைவி. இவள் எதைப் பெறுவாள்? நன்கு பாருங்கள்' என்றுசொன்னார்கள். அரசரே! நராதிபரே! இவ்விதம்சொல்லப்பட்டவர்களும் விபரீதமான வார்த்தையினால் அவமதிக்கப்பட்டவர்களுமான அந்த முனிவர்கள் அவர்களுக்குக் கூறின மறுமொழியைக் கேளும். ராஜரே! பிறகு, துராத்மாக்களான அவர்களால் அவமதிக்கப்பட்ட முனிவர்கள் கோபத்தால் கண்கள் சிவந்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு (அவர்களை நோக்கி), 'வாஸுதேவருடையபுத்திரனான இந்தஸாம்பன் விருஷ்ணிகளும் அந்தகர்களும் அழிவதின்பொருட்டுக் கோரமான இருப்புலக்கையைப் பிறப்பிப்பான்; அதனால் மிக்க கெட்ட நடையுள்ளவர்களும் கொடியவர்களுமான நீங்கள் சினங்கொண்டு, பலராமரையும் கிருஷ்ணரையும் தவிரக் குலத்தை முழுதும் அழிக்கப்போகிறீர்கள். ஸ்ரீமானும் கலப்பையை ஆயுதமாகக் கொண்டவருமான பலராமர் சரீரத்தை விட்டுவிட்டு ஸமுத்திரத்தில் பிரவேசிக்கப்போகிறார். ஜரன் என்னும் செம்படவன், பூமியில் சயனம் செய்துகொண்டிருக்கும் கிருஷ்ணரைப் பிளக்கப் போகிறான்' என்று சொன்னார்கள். அந்த முனிவர்கள் அவ்வாறு சொல்லிவிட்டு, பிறகு, [1]வந்தவழியே சென்றனர். பிறகு, முடிவை அறிந்தவரும் சிறந்த புத்தியுள்ளவருமான வாஸுதேவர் அப்பொழுது இதைச்செவியுற்று அந்த விருஷ்ணிகளை நோக்கி, 'அக்குலத்திற்கு அவ்விதம் வரவேண்டியதே' என்று சொன்னார். அப்பொழுது, அவர் இவ்விதம்சொல்லிவிட்டுப் பட்டணம் சென்றார். ஜகத்திற்குப்

---

1. 'கேசவனை அடைந்தார்கள்' என்பது வேறுபாடம். அதற்கு, 'நாங்கள் கொடுத்த சாபத்தை நீர் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று நியானம்செய்தார்கள்' என்பது பழைய உரை.

பிரபுவான அவர் ஸித்தாந்தத்தை வேறுவிதமாகச் செய்ய விரும்ப வில்லை. பிறகு, மறுநாள், ஸாம்பன் விருஷ்ணிகுலத்திலும் அந்தக குலத்திலுமுள்ள ஆண்மக்களைப் பஸ்மமாகச் செய்வதும் விருஷ்ணிகளையும் அந்தகர்களையும் கொல்வதற்காக (வந்த) யமதூதன் போன்றதும் பெரிதும் சாபத்தால் உண்டானதும் கோரமுமான உலக்கையைப் பெற்றான். அதை அரசனிடம் தெரிவித்தார்கள். ராஜரே! அரசன் மிக்க மன வருத்தமுற்று அதைச் சிறியபொடியாகச் செய்வித்தான். வேலைக்காரர்கள் அந்தப் பொடியை ஸமுத்திரத்திலும் போட்டுவிட்டார்கள். அவர்கள் ஆஹுகன் கிருஷ்ணர் பலராமர் மஹாத்மாவான பப்ரு இவர்களுடைய உத்தரவின்மேல், 'இது முதல் இந்நகரில் விருஷ்ணிகுலத்தினரும் அந்தக குலத்தினரும் நகரவாசிகளுமான அனைவரும் கள்ளையும் சாராயத்தையும் (பானம்) செய்யக்கூடாது. எந்த மனிதனாவது பானம் செய்ததாக எங்களுக்குத் தெரிந்தால், அவன், தான் செய்ததற்காகத் தன்பந்துக்களுடன் உயிரோடு சூலத்தில் ஏறவேண்டும்' என்று பட்டணத்தில் பறையறையச் செய்தனர். பிறகு, ஜனங்களெல்லாரும் அப்பொழுது மஹாத்மாவான அந்த மன்னருடைய உத்தரவை அறிந்து ராஜ பயத்தினால் நியமத்தைச் செய்துகொண்டனர்.

## மூன்றாவது அத்யாயம்.

—:o:—

**(வாஸுதேவர் துவாரகையில் பல உற்பாதங்களைக் கண்டு காந்தாரியின் சாபத்தை நினைந்து அதனை உண்மையாக்க விரும்பி யாதவர்களைத் தீர்த்த யாத்திரை செய்யக் கட்டளையிட்டது.)**

இவ்விதம், விருஷ்ணிகளும் அந்தகர்களும் அடங்கியிருக்கும்போது காலமானது (கோட்டான் முதலான வடிவத்துடன்) எல்லாருடைய வீடுகளிலும் தினந்தோறும் ஸஞ்சரித்தது. பயங்கரனும் விசாலமாக இருப்பவனும் [1]முண்டனும் கருமைநிறமும் பொன்நிறமுமுள்ளவனுமான புருஷன் விருஷ்ணிகளுடைய வீடுகளில் பிரவேசித்து மீண்டும் ஓரிடத்தில் மறைந்தான். அப்பொழுது, சிறந்த வில்லாளிகள் லக்ஷக் கணக்கான கணைகளால் அவனை அடித்தார்கள். எல்லாப் பிராணிகளையும் கொல்பவனான அவனை அடிக்கக் கூடவில்லை. விருஷ்ணிகள் அந்தகர்கள் இவர்களுடைய நாசத்தின்பொருட்டுத் தினந்தோறும் மயிரைச்

---

1. கேசமற்றவன்.

சிலிர்க்கச் செய்கின்றவைகளும் பயங்கரமானவைகளுமான பல பெருங் காற்றுக்கள் உண்டாயின. தெருவீதிகள் அதிகமான எலிகளுள்ளனவும் உடைக்கப்பட்ட மண்பாத்திரங்களுள்ளனவுமாக இருந்தன. இரவில், தூங்குகின்றவர்களுடைய கூந்தல்களையும் நகங்களையும் எலிகள் தின்றன. விருஷ்ணிகளுடைய வீடுகளில் நாகணவாய்ப் பட்சிகள் 'சீசீ, கூசீ' என்று சப்தித்தன. அந்தச் சப்தமும் இரவும் பகலும் ஓயவில்லை. பாரதரே! ஸாரஸபக்ஷிகள் கோட்டான்கள்போலச் சப்தித்தன. ஆடுகள் நரிகள்போல ஊளையிட்டன. அப்பொழுது, வெண்மை நிறமுள்ளவைகளும் சிவந்த பாதங்களுள்ளவைகளுமான கபோதங்களென்னும் பறவைகள் காலத்தால் தூண்டப்பட்டு விருஷ்ணிகளின் வீடுகளிலும் அந்தகர்களின் வீடுகளிலும் ஸஞ்சரித்தன. பசுக்களிடத்திலும் ஒட்டகங்களிடத்திலும் [1]அச்வதரிகளிடத்திலும் கழுதைகளும், நாய்களிடத்தில் பூனைகளும், கீரிகளிடத்தில் எலிகளும் பிறந்தன. அப்பொழுது, விருஷ்ணிகள் வெட்கமின்றிப் பாபகாரியங்களைச் செய்தார்கள். அவ்வாறே, பிராம்மணர்களையும் பித்ருக்களையும் தேவர்களையும் [2]துன்பப்படுத்தினார்கள்; ஆசாரியர்களையும் அவமதித்தார்கள். [3]பலராமரையும் கிருஷ்ணரையுமோ அவமதிக்கவில்லை. பத்னிகள் பர்த்தாக்களை வஞ்சித்தார்கள். அவ்வாறே, பர்த்தாக்கள் பத்னிகளை வஞ்சித்தார்கள். ஜ்வலிக்கும்படி செய்யப்பட்ட அக்னியானது நீலமாகவும் சிவப்பாகவும் மஞ்சள் வர்ணமாகவுமிருக்கிற ஜ்வாலைகளைத் தனித்தனியாக உண்டு பண்ணிக்கொண்டு இடமாகச் சுற்றிற்று. அந்தப்பட்டணத்தில் தினந்தோறும் ஸூரியன் உதயகாலத்திலும் அஸ்தமனகாலத்திலும் தலையற்ற புருஷசரீரங்களால் நெருக்கமாகச் சூழப்பட்டவனாகக் காணப்பட்டான். பாரதரே! சுத்தமாயிருக்கும் சமையலறைகளில் மிகவும் நன்றாகப் பக்குவம் செய்யப்பட்டிருக்கும் அன்னத்தில் ஆயிரக்கணக்கான புழுக்கள் காணப்பட்டன. புண்யாஹமந்திரம் சொல்லும்படி செய்து மஹாத்மாக்கள் ஜபம் செய்துகொண்டிருக்கும்போது, ஜனங்கள் ஓடும் ஒலிகள் கேட்கப்பட்டன; ஒருவனும் காணப்படவில்லை. அவர்களெல்லாரும் க்ரஹங்களால் அடிக்கடி ஹிம்ஸிக்கப்படும் ஒருவர் மற்றவருடைய நக்ஷத்திரத்தைப் பார்த்தார்கள். எவ்விதத்திலும் தம் நக்ஷத்திரத்தைப் பார்க்கவில்லை. விருஷ்ணிகளுடைய வீட்டிலும் அந்தகர்க

1 குதிரையினிடத்தில் கழுதையினால் பிறந்தவை.

2 'பகைத்தார்கள்' என்பது வேறுபாடம்.

3 பலராமரும் கிருஷ்ணருமோ அவ்விதம் செய்யவில்லை என்றுமாம்.

ளுடைய வீட்டிலும் சப்திக்கின்ற பாஞ்சஜன்யத்தைச்சுற்றிக் கழுதை கள் பயங்கரமான ஸ்வரத்துடன் சப்தித்தன. வாஸுதேவர், இவ்விதம் நேர்ந்திருக்கும் காலத்தின்மாறுதலையும் பதின்மூன்ருவதுநாளில் அமா வாஸ்யைவந்ததையும் கண்டு, அவர்களைப்பார்த்து, 'ராகுவினுல் மறுபடி யும் இந்தச் சதுர்த்தசியானது பூர்ணிமையாகச் செய்யப்பட்டது பாரதயுத்தம் நெருங்கினபொழுது நேர்ந்த இது இப்பொழுதும் நம் முடைய நாசத்தின்பொருட்டு வந்துவிட்டது' என்று சொன்னுர். கேசியைக்கொன்றவரான அந்த ஜனார்த்தனர் அந்தக் காலத்தைப் பற்றி ஆராய்ந்து ஆலோசித்துக்கொண்டே முப்பத்தாருவது வருஷம் வந்துவிட்டதாக எண்ணினுர். பிறகு, அவர், 'புத்திரசோகத்தால் நன்கு தபிக்கப்பட்டவளும் பந்துக்களையிழந்தவளுமான காந்தாரியானவள் துயரத்துடன் எதைச்சொன்னுளோ அது இதோ வந்துவிட்டது.. முன்பு ஸேனைகள் அணிவகுக்கப்பட்டிருக்கும்போது மிகக்கொடிய வைகளான உத்பாதங்களைக்கண்டு யுதிஷ்டிரர் எதைச் சொன்னுரோ அது இதோ வந்துவிட்டது' என்று சொன்னுர். பகைவரை அடக்குபவ ரான வாஸுதேவர் இவ்வாறு சொல்லிவிட்டு அந்த வசனத்தை உண்மையாகவே செய்யவிரும்பி அப்பொழுது தீர்த்தயாத்திரை செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டார். அப்பொழுது, வேலைக்காரர்கள், கிருஷ்ணருடைய உத்தரவின்மேல், 'புருஷஶ்ரேஷ்டர்களே! ஸமுத் திரத்தைக்குறித்துத் தீர்த்தயாத்திரை செய்யவேண்டும்' என்று பறை யறையச் செய்தார்கள்.

## நான்காவது அத்யாயம்.

---:o:---

(துவாரகா வாஸிகள் தீக்கனவு கண்டதும் வாஸுதேவர் கட்டளைப்படி ப்ரபாஸக்ஷேத்ரம் சென்றதும், அங்கே பாட்டுக் கூத்துக்களுடன் குடித்ததும், ஸாத்யகி க்ருதவர்மாவை நிந்தித்ததும், ஸ்யமந்தக மணியின்வரலாறுகேட்டு வருந்திய ஸத்யபாமையை மகிழ்வித்தற்காக ஸாத்யகி க்ருதவர்மாவைக் கொன்றதும், உலக்கைத்தூளாலுண்டான புற்களால் இருதிறத்தாரும் ஒருவரை ஒருவர் கொன்றதும்.)

ஸ்வப்னங்களில், கருமை நிறமுள்ளவளும் வெண்மை நிறமுள்ள பற்களுள்ளவளுமான ஸ்திரீயானவள் நகைத்துக்கொண்டு இரவில்

துவாரகையில் பிரவேசித்து (ஸ்திரீகளுடைய மங்களதந்து முதலானவற்றைத்) திருடிக்கொண்டு ஓடினாள். கனவில், பயங்கரமான கழுகுகள், அக்னி ஹோத்திர கிருகங்களிலும் [1]வாஸ்துக்களின் நடுவிலும் வீடுகளிலும் விருஷ்ணிகளையும் அந்தகர்களையும் தின்றன. அலங்காரங்களும் குடையும் த்வஜங்களும் கவசங்களும் மிக்க பயங்கரர்களான ராக்ஷஸர்களால் அபஹரிக்கப்படுகின்றனவாகக் காணப்பட்டன. அப்பொழுது, அக்னியினால் கொடுக்கப்பட்டதும் வஜ்ரம்போன்ற நாபியுள்ளதும் உருக்குமயமானதுமான கிருஷ்ணனுடைய அந்தச் சக்கரமும் விருஷ்ணிகள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே ஆகாயம் சென்றது. மனம்போன்றவேகமுள்ளவைகளும் குதிரைகளுள் சிறந்தவைகளுமான அந்த நான்கு குதிரைகளும், தாருகன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, ஆயத்தமாக இருப்பதும் திவ்யமானதும் சூரியன்போல விளங்குகின்றதுமான ரதத்தை இழுத்துக்கொண்டு ஸமுத்திரத்துக்கு மேலே சென்றன. பலராமராலும் கிருஷ்ணராலும் நன்குபூஜிக்கப்பட்ட சிறந்த த்வஜங்களாகஇருக்கும் அந்தப் பனைமரமும் கருடனும் தேவலோக வாஸிகளான அப்ஸரஸ்திரீகளும் (ரதங்களை) மேலே இழுத்தனர். தேவர்கள், 'தீர்த்தயாத்திரைக்குச் செல்லுங்கள்' என்று சொன்னார்கள். பகவானை கிருஷ்ணரைத் தரிசித்தும் பரிசித்தும் தியானித்தும் விஸ்தாரமான ஸுகத்தை அடைந்தவர்களான அந்தத் தேவர்கள் ஸ்வர்க்கத்திற்குச் செல்லவேண்டியதற்காக விமானங்களோடு ஆகாயம் சென்றனர். பிறகு, புருஷஸ்ரேஷ்டர்களும் மஹாரதர்களுமான அந்த விருஷ்ணிகளும் அந்தகர்களும் அந்தப்புரங்களுடன் (துவாரகையை விட்டுச்) செல்ல விருப்பமுள்ளவர்களாகித் தீர்த்தயாத்திரையை விரும்பினார்கள். பிறகு, (அழகினால்) மனத்தைச் கவருகின்றவர்களான அவர்கள் காலத்தால் தூண்டப்பட்டவர்களாகி ஸந்தோஷத்துடன் பானம் செய்யத் தகுந்ததையும் மாம்ஸத்தையும் மதுக்களையும் மிகுதியாகவும் பற்பலவிதமாகவும் விரைந்து செய்தனர். பிறகு, கள்ளில் ஆசையுள்ளவர்களும் செல்வம் நிறைந்தவர்களும் கொடிய சக்தியுள்ளவர்களுமான அவர்கள் வாகனங்களுடனும் குதிரைகளுடனும் யானைகளுடனும் பட்டணத்திலிருந்து வெளிப்புறப்பட்டனர். பிறகு, அதிகமான தின்பண்டங்களும் குடிக்கத்தக்கவைகளுமுள்ளவர்களும் மனைவிகளோடுகூடினவர்களுமான அந்த யாதவர்கள் அப்பொழுது பிரபாஸத்தில் குறிப்பிடப்பட்ட வீட்டில் வஸித்தனர். பிறகு, யோகத்தை அறிந்தவரும் மோக்ஷத்

1 வீடுகட்டத் தகுந்த பூமிகள்.

தில் பண்டிதருமான அந்த உத்தவர் அவர்கள் ஸமுத்திரத்தினருகில் வஸிப்பதைப் பார்த்து அந்த வீரர்களிடம் அநுமதிபெற்றுக்கொண்டு சென்றார். வந்தனம் செய்து அஞ்சலிசெய்துகொண்டு புறப்பட்டவரும் மஹாத்மாவுமான அந்த உத்தவரை, விருஷ்ணிகளுடைய நாசத்தை அறிந்தவரான வாஸுதேவர் தடுக்க விரும்பவில்லை. பிறகு, காலத்தால் சூழப்பட்டவர்களும் மஹாரதர்களுமான அந்த விருஷ்ணிகளும் அந்தகர்களும் உத்தவர் தேஜஸினால் ஆகாயத்தையும் பூமியையும் வியாபித்துக்கொண்டு செல்லுகின்றதைப் பார்த்தார்கள். அந்த மஹாத்மாக்களான பிராம்மணர்களுக்காக ஸித்தஞ்செய்யப்பட்டதும் ஸுரையின் வாஸனையோடுகூடியதுமான அன்னத்தை அவர்கள் [1]குரங்குகளுக்குக் கொடுத்தார்கள். பிறகு, கடுமையான பராக்ரமமுள்ள அவர்களுக்குப் பிரபாஸத்தில் அநேகம் தூர்யங்களால் நெருங்கியதும் நடர்களாலும் நர்த்தகர்களாலும் வியாபிக்கப்பட்டதுமான சிறந்தபானம் நடந்தது. கிருஷ்ணனுடைய ஸந்நிதியில் கிருதவர்மாவுடன் பலராமரும் யுயுதானனும் கதனும் பப்ருவும் பானஞ்செய்தார்கள். பிறகு, ஸபையின் நடுவில் மிக்கமதமுள்ளவனான யுயுதானன் கிருதவர்மாவைப் பரிஹஸித்தும் அவமதித்தும், 'ஹார்த்திக்ய! எந்தக்ஷத்திரியன், (தான்) கொல்லப்பட்டாலும் இறந்தவர்களைப்போலத் தூங்குகின்றவர்களைக் கொல்லுவான்? உன்னால்செய்யப்பட்ட அந்தக்காரியத்தை யாதவர்கள் பொறுக்கவில்லை' என்று சொன்னான். யுயுதானனால் இவ்விதம் சொல்லப்பட்டவுடன், ரதிகர்களுள் சிறந்தவனான பிரத்யும்னன் கிருதவர்மாவை அவமதித்து அந்தவசனத்தைப் பூஜித்தான். பிறகு, கிருதவர்மாவானவன் கடுஞ்சினங்கொண்டு அப்பொழுது அவனை அவமதிப்புடன் இடக்கையினால் காண்பித்துக்கொண்டு, 'யுத்தத்தில் கையறுக்கப்பட்டவனும் பிராயோபவேசம் செய்தவனுமான பூரிஸ்ரவஸை வீரனான நீ எவ்வாறு மிக்கொடியவதம் செய்து வீழ்த்தினாய்?' என்று சொன்னான். அவனுடைய இவ்விதமான வசனத்தைக்கேட்டுச் சத்துருவீரர்களைக் கொல்பவரான வாஸுதேவர் கோபங்கொண்டு கோபத்தோடுகூடின நேத்திரத்தினால் குறுக்காகப் பார்த்தார். ஸ்யமந்தகமென்னும் எந்தமணியானது ஸத்ராஜித்தினிடமிருந்ததோ அதைப்பற்றிய கதையை ஸாத்யகியானவன் மதுஸூதனருக்குச் சொன்னான். அப்பொழுது, ஸத்யபாமையானவள் அதைக் கேட்டு மிக்க கோபங்கொண்டு கிருஷ்ணருக்குக் கோபத்தை உண்டு

1. 'பிராம்மணர்களுக்கென்று ஸித்தம் செய்ததை வேறுவகையில் செலவிட்டது ஆயுளின் குறைவுக்குக் காரணம்' என்பது பழையவுரையின் கருத்து.

பண்ணிக்கொண்டும் அழுதுகொண்டும் கிருஷ்ணருடைய ஸமீபம் சென்றாள். பிறகு, ஸாத்யகியானவன் கோபத்துடன் எழுந்திருந்து, 'திரௌபதியின் ஐந்துகுமாரர்கள் திருஷ்டத்யும்னன் சிகண்டி இவர்களுடைய ஸ்தானத்தை நான் அடைகிறேன். அவ்வாறு, உண்மையாகச் சபதம்செய்கிறேன். அழகிய இடையுள்ளவளே! நித்ராகாலத்தில் நித்திரைசெய்யும் அவர்களைத் துராத்மாவும் பாபியுமான எந்தக்கிருதவர்மாவானவன் அஸ்வத்தாமாவை உதவியாகக்கொண்டு கொன்றானோ, அவனுடைய ஆயுளும் புகழும் இப்பொழுது முடிவுபெற்றன' என்று வாக்கியத்தைச் சொன்னான். கோபங்கொண்ட அவன் இவ்விதம் சொல்லிவிட்டு, வாஸுதேவருக்கு ஸமீபத்திலிருந்து எதிர்த்தோடிக் கத்தியினால் கிருதவர்மாவினுடைய தலையைவெட்டினான். அப்பொழுது, அவ்வாறே, நாற்புறங்களிலுமுள்ள மற்றவர்களையும் கொல்லுகின்ற யுயுதானனைத் தடுப்பதற்காகக் கேசவர் ஓடினார். மஹாராஜரே! பிறகு, எல்லாப்போஜர்களும் அந்தகர்களும் காலத்தின் வேற்றுமையால் தூண்டப்பட்டு ஒன்றுசேர்ந்து யுயுதானனைச் சூழ்ந்துகொண்டார்கள். சிறந்த தேஜஸுள்ளவரும் காலத்தின் வேற்றுமையை அறிந்தவருமான வாஸுதேவர், அவர்கள் கோபத்துடன் வேகமாக வருவதைக்கண்டும் கோபங்கொள்ளவில்லை. பிறகு, பானத்தால் வெறிகொண்டவர்களும் காலதர்மத்தால் தூண்டப்பட்டவர்களுமான அவர்களோ. அப்பொழுது யுயுதானனை எச்சிற்பாத்திரங்களால் அடித்தார்கள். அதன்பிறகு, ஸாத்யகியானவன் அடிக்கப்படும்பொழுது, ருக்மிணியின் குமாரனை ப்ரத்யும்னன் கோபங்கொண்டு சினியின்புத்திரனை ஸாத்யகியை விடுவிப்பதற்காக வந்தான். அவன் போஜர்களோடு சண்டைசெய்தான். ஸாத்யகியானவன் அந்தகர்களோடு சண்டைசெய்தான். அப்பொழுது, போர்புரிகின்றவர்களும் வீரர்களும் கைவன்மையினால் பிரகாசிக்கின்றவர்களுமான அவ்விருவர்களும் (எதிரிகள்) அதிகமாக இருந்ததால் கேசவர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே கொல்லப்பட்டார்கள். பிறகு, யதுநந்தனரான மாதவர் ஸாத்யகியும் புத்திரனும் கொல்லப்பட்டதைக்கண்டு கோபங்கொண்டு ஒரு பிடி [1] ஏரகங்களைப் பிடுங்கினார். அந்தப்பிடி பயங்கரமும் வஜ்ரம் போன்றதும் உருக்கினால் செய்யப்பட்டதுமான உலக்கையாயிற்று. வாஸுதேவர் அதனால் எவரெவர்கள் எதிரிலிருந்தார்களோ அவர்களையெல்லாம் அடித்தார். பிறகு, அந்தகர்களும் போஜர்களும் சைனேயர்களும் விருஷ்ணிகளும் காலத்தால் தூண்

1. ஒரு வகைக் கோரை.

டப்பட்டுப் போரில் உலக்கைகளால் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டார்கள். மனிதர்களைக் காப்பவரே! ராஜரே! பிரபுவே! அவர்களுள் எவனாக இருந்தாலும் கோபங்கொண்டு ஏரகத்தை எடுத்தால் அது அப்பொழுது வஜ்ரமானதுபோலக் காணப்பட்டது. அப்பொழுது, திருணமும் உலக்கையாகக் காணப்பட்டது. ராஜரே! அவையெல்லாம் பிராம்மண சாபத்தால் செய்யப்பட்டனவென்று தெரிந்து கொள்ளும். அரசரே! அவர்கள் அந்தத் திருணங்களால் சுழற்றிச் சுழற்றி அடித்தார்கள். அந்தப் புல் அப்பொழுதே வஜ்ரத்தினாலாகிய உறுதியான உலக்கையாகக் காணப்பட்டது பாரதரே! மகன் தந்தையையும் தந்தை மகனையும் கொன்றனர். மதம்பிடித்த அவர்கள் யுத்தம்செய்து கொண்டு ஒருவர்மீதொருவர் விழுந்தனர். அந்தக் குகுரர்களும் அந்தகர்களும் விட்டிற்பூச்சிகள் நெருப்பில் விழுவதுபோல விழுந்தனர். கொல்லப்படுகின்ற ஒருவனுக்கும் ஓடுவதில் புத்தி உண்டாகவில்லை. அப்பொழுது, சிறந்த கைகளுள்ளவரும் காலத்தின் மாறுதலை அறிந்தவருமான அந்த வாஸுதேவர் உலக்கையைப் பிடித்துக்கொண்டு பார்த்துக்கொண்டே நின்றார். பாரதரே! அவர் ஸாம்பனும் சாருதேஷ்ணனும் பிரத்யும்னனும் அநிருத்தனும் கொல்லப்பட்டதைப் பார்த்தபிறகு கோபங்கொண்டார். சார்ங்கத்தையும் சக்ரத்தையும் கதையையும் ஏந்தியவரான அந்த வாஸுதேவர், கதனும் படுத்திருப்பதைக் கண்டு மிக்க கோபங்கொண்டு, அப்பொழுது, (அவர்களை) மிச்சமின்றிச் செய்தார். (அவ்வாறு) கொல்லுகின்றவரான அந்தக் கேசவரை நோக்கி மிக்க தேஜஸுள்ளவனும் பகைவரின் பட்டணங்களை ஜயிப்பவனுமான பப்ருவும் தாருகனும் சொல்லியதைத் தெரிந்துகொள்ளும். (அதாவது) 'பகவானே! மிகுதியான எல்லா மனிதர்களும் உம்மால் கொல்லப்பட்டனர். பலராமரிருக்கும் இடத்தைத் தேடும். அவர் இருக்குமிடம் செல்வோம்' என்பது.

---

## ஐந்தாவது அத்யாயம்.

—:o:—

(வாஸுதேவர் பலராமரைத் தேடிக் கண்டதும், தாருகனைப் பாண்டவரிடம் அனுப்பியதும், பலராமர் சேஷனாகிக் கடலிற் சென்றதும், வாஸுதேவர் சரீரத்தை விடுவதற்கு யோகத்தோடு படுத்ததும், வேடன் மிருகமென்றெண்ணி அவரை அடித்துப் பச்சாத்தாபப்பட அவர் அவனுக்கு முக்திகொடுத்துத் தாமும் பரமபதமடைந்ததும்)

பிறகு, வாஸுதேவரும் தாருகனும் பப்ருவும் பலராமரிருக்குமிடத்தைக் குறித்து வேகமாகச் சென்று, அளவற்ற பராக்ரமமுள்ளவரும் ஒருவருமில்லாதவிடத்தில் மரத்தினடியில் உட்கார்ந்து ஆலோசித்துக்கொண்டிருப்பவருமான பலராமரைப்பார்த்தார்கள். பிறகு, மஹானுபாவரான வாஸுதேவர் அருகில் சென்று அப்பொழுது தாருகனை நோக்கி, 'நீ கௌரவர்களிடம் சென்று பார்த்தனிடத்தில் யாதவர்களுக்கு நேர்ந்த இப் பெரியநாசத்தை முழுதும் சொல். பிறகு, அர்ஜுனன், யாதவர்கள் பிராம்மண சாபத்தால் மரித்ததைக் கேட்டுச் சீக்கிரம் இங்குவரட்டும்' என்று உத்தரவு செய்தார். இவ்வாறு சொல்லப்பட்டவனும் பிரஜ்ஞையை இழந்தவனுமான அந்தத்தாருகன் அப்பொழுது ரதத்தோடு குருதேசத்தை நோக்கிச் சென்றான். பிறகு, வாஸுதேவர், தாருகன் சென்றவுடன் அருகிலிருக்கும் பப்ருவைப் பார்த்து, 'நீ ஸ்திரீகளை ரக்ஷிப்பதற்காகச் சீக்கிரம் செல். அவர்களைத் திருடர்கள் பொருளில் ஆசைகொண்டு துன்பம் செய்யவேண்டாம்' என்று சொன்னார். கேசவரால் உத்தரவு செய்யப்பட்டவனும் மதத்தால் கவரப்பட்டவனும் ஞாதிகளுடைய வதத்தினால் வருத்தமுற்றவனுமான அவன் புறப்பட்டான். ஒருவனாக விரைந்துசெல்லுகின்றவனும் பிராம்மணனால் சபிக்கப்பட்டவனுமான அந்தப் பப்ருவைக் கிருஷ்ணருக்கருகிலேயே யந்திரத்தில் கட்டப்பட்டிருந்ததும் பெரிதுமான வேடனுடைய உலக்கையானது வேகமாக (விழுந்து) கொன்றது. பிறகு, உக்ரமான தேஜஸுள்ள யாதவர், பப்ருகொல்லப்பட்டதைக் கண்டு, மூத்தஸஹோதரரான பலராமரை நோக்கி, 'ராமரே! நான் ஸ்திரீகளை ஞாதிகளிடம் ஒப்பிக்கிறேன். நீர் இவ்விடத்திலேயே என்னை எதிர்பார்த்துக்கொண்டிரும்' என்று சொன்னார். பிறகு, அவர் துவாரகா நகரம் சென்று, தந்தையை நோக்கி, 'நீர் அர்ஜுனனுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு நம்மு

டைய எல்லா [1]ஸ்திரீகளையும் ரக்ஷியும். பலராமர் வனத்தின் மத்தியில் என்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். நான் இப்பொழுது அவரிடம் செல்லப்போகிறேன். என்னால் யாதவர்களுடைய இந்த நாசமானது பார்க்கப்பட்டது. முன்பு, கௌரவச்ரேஷ்டர்களான மன்னர்களுடைய நாசமும் பார்க்கப்பட்டது. யாதவர்களில்லாமல் யாதவர்களுடைய இந்தப் பட்டணத்தைப்பார்க்க இப்பொழுது என்னால் முடியவில்லை. ஆகையால், நான் கானகம் சென்று பலராமருடன் தவம் புரியப் போகிறேனென்னும் இதை என்னிடமிருந்து தெரிந்து கொள்ளும்' என்ற வாக்கியத்தைச் சொன்னார்.

கேசவர் இவ்விதம் இந்த வாக்கியத்தைச்சொல்லிவிட்டுத் தலை இரு பாதங்களிலும் பட வந்தனஞ்செய்து வேகமாகச் சென்றார். பிறகு, ஸ்திரீகளோடும் சிறுவர்களோடும் கூடின அந்தப் பட்டணத்தில் பெரிய கூச்சல் உண்டாயிற்று. பிறகு, கிருஷ்ணர் அழுகின்ற ஸ்திரீகளுடைய சப்தத்தைக் கேட்டுத் திரும்பி (வந்து), 'அர்ஜுனன் இந்தப்பட்டணத்திற்கு வரப்போகிறான். புருஷச்ரேஷ்டனான அவன் உங்களைத் துக்கத்திலிருந்து விடுவிப்பான்' என்றுசொன்னார். பிறகு, அவர் சென்று, வனத்தில் ஏகாந்தமான இடத்தில் ஒருவராக இருக்கும் அந்தப்பலராமரைப் பார்த்தார். பிறகு, கோவிந்தர் யோகம்செய்கின்ற அந்தப்பலராமருடைய முகத்திலிருந்து வெளிப்படுகின்றதும் வெண்மை நிறமுள்ளதுமான பெரிய நாகத்தைக்கண்டார். பிறகு, அவர் பார்த்துக்கொண்டிருக்கும் போது, சிறந்த பிரபாவமுள்ளதும் ஆயிரம்தலைகளுள்ளதும் மலைபோல விசாலமான சரீரமுள்ளதும் சிவந்தமுகங்களுள்ளதுமான அந்த நாகமானது தனது அந்த(ப்பலராம) சரீரத்தை விட்டுவிட்டுப் பெருங்கடலில் பிரவேசித்தது. ஸமுத்திரத்தில் பிரவேசிக்கின்ற அதனைக்கண்டு அப்பொழுது ஸமுத்திரமானது நன்கு வரவேற்றது. ராஜரே! பூமியைத் தரிப்பவரும் சுத்தமான புத்தியுள்ளவருமான (அந்த) ஸங்கர்ஷணரைத் தெய்வத்தன்மையுள்ள நாகர்களும் புண்ணிய நதிகளும் கார்க்கோடகனும் வாஸுகியும்தக்ஷகனும் ப்ருதுச்ரவஸும் அருணனும் குஞ்சரனும் மிச்ரியும் சங்கனும் குமுதனும் புண்டரீகனும் மஹாத்மாவான திருதராஷ்டிரனென்னும் நாகனும் ஹ்ராதனும் க்ராதனும் சிதிப்ருஷ்டனும் ஏகேதவும் சக்ரமந்தன் அதிஷண்டன் என்னும் இரண்டு நாகங்களும் நாகச்ரேஷ்டனான துர்முகனும் அம்பரீஷனும் ஸாக்ஷாத்ராஜாவான வரு

1. வேறுபாடம்.

ளையும் எதிர்சென்று நல்வரவு விசாரித்துக் கொண்டாடி அர்க்யம் பாத்யம் (முதலான) விதிகளால் பூஜித்தார்கள். பிறகு, திவ்யஜ்ஞானமுள்ளவரும் எல்லாக்கதிகளையும் அறிந்தவரும் சிறந்த தேஜஸுள்ளவருமான வாஸுதேவர், பிராதா சென்றவுடன், சூன்யமான கானகத்தில் ஆலோசனை செய்துகொண்டு ஸஞ்சரித்து, பிறகு, பூமியில் உட்கார்ந்தார். அப்பொழுது, அந்தக் கிருஷ்ணர் முன்பு தம்முடைய செய்கையினால் காந்தாரி சொன்ன எல்லா வாக்கியத்தையும் எச்சிற்பாயஸத்தைப் பூசிக்கொண்டபொழுது துர்வாஸர் சொன்ன வாக்கியத்தையும் நினைத்தார். பிறகு, இருக்கவேண்டிய முறைப்படி இருப்பவர்களான குலஸ்திரீகளுக்கும் பசுக்களுக்கும் பிராம்மணச்ரேஷ்டர்களுக்கும் தர்மானுஷ்டானத்தில் மனவுறுதியைக் கொடுத்தவரும் தேவர்களுக்கும் உத்பத்திகாரணரும் வரமளிப்பவரும் பிரமனுக்கும் தேவரும் கோவிந்தரென்று பெயருள்ளவரும் நித்யரும் பெரிய மஹிமைபொருந்தியவருமான வாஸுதேவர் அந்தகர்கள் விருஷ்ணிகள் இவர்களுடைய நாசத்தையும் கௌரவர்களுடைய நாசத்தையும் ஆலோசித்து இவ்வுலகிலிருந்து (தம்முலகம்) செல்ல (அது) காலமென்றெண்ணிப் பிறகு இந்திரியங்களை அடக்கினார். எல்லாப் பொருள்களின் தத்வத்தையும் உணர்ந்தவரான அவர் தாம் தேவராக இருந்தும் மூவுலகங்களையும் பரிபாலிப்பதற்காகவும் துர்வாஸருடைய சாபத்தைக்காப்பதற்காகவும் சரீரத்தை விடவேண்டியதற்காக நிமித்த காரணத்தை விரும்பினார். அந்தக் கிருஷ்ணர் இந்திரியங்களையும் வாக்கையும் மனத்தையும் அடக்கிச் சிறந்த யோகத்தை அடைந்து படுத்துக்கொண்டார். அப்பொழுது, மிருகங்களை அடைய விருப்பமுள்ளவனும் குரூரனுமான ஜரன் என்னும் வேடன் அவ்விடம் வந்தான். மிருகத்தில் ஆசையுள்ளவனான ஜரனென்னும் அந்த வேடன், யோகத்தை ஆச்ரயித்துச் சயனம் செய்துகொண்டிருக்கும் பகவானை விரைந்து பாணத்தினால் உள்ளங்காலில் அடித்துவிட்டு அவரை எடுக்க விரும்பி அருகிலும் சென்றான். பிறகு, ஜரன் என்னும் அந்த வேடன் யோகஞ்செய்கின்றவரும் பீதாம்பரம் தரித்தவரும் அநேகம் கைகளுள்ளவருமான புருஷரைக் கண்டு தன்னைக் குற்றம் செய்தவனாக எண்ணி மனம் கலங்கி அவருடைய இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டான். அவன் செய்கையையும் பிறவியையும் பற்றின பச்சாத்தாபத்தினின்று தேறுதலடையும்படி செய்யப்பட்டவனாகி, புண்ணியத்தின் பயனான பக்தியோடு, முடிவற்ற பராக்ரமமுள்ளவரும் தேவருமான கிருஷ்ணரைத் தரிசித்துச் சரீரத்தை விட்டுத் தேவர்களால் ஸ்வர்க்கத்தை

அடையும்படி செய்யப்பட்டான். அப்பொழுது, அந்த வாஸுதேவர் முனிவர்களுடைய கூட்டங்களால் பூஜிக்கப்பட்டு ஒளியினால் உலகங்களை வியாபித்துக்கொண்டு உயரச் சென்றார். ஆகாயத்தை அடைந்தவரான அவரை இந்திரனும் அச்வினீதேவர்களும் ருத்திரர்களும் ஆதித்யர்களும் வஸுக்களும் விச்வேதேவர்களும் முனிவர்களும் ஸித்தர்களும் கந்தர்வ ச்ரேஷ்டர்களும் அப்ஸரஸுகளும் எதிர்கொண்டு வந்தார்கள். ராஜரே! பிறகு, பகவானும் உக்ரமான தேஜஸுள்ளவரும் (உலகங்களுக்கு) உத்பத்திகாரணரும் அழிவற்றவரும் யோகாசாரியரும் மஹாத்மாவுமான நாராயணர் ஒளியினால் ஆகாயத்தையும் பூமியையும் நிரப்பிக்கொண்டு அளவிட முடியாத மஹிமையுள்ளதான தம்முடைய ஸ்தானத்தை அடைந்தார். ராஜரே! அப்பொழுது தேவர்களும் ரிஷிகளும் சாரணர்களும் கந்தர்வச்ரேஷ்டர்களும் சிறந்த அப்ஸரஸுகளும் ஸித்தர்களும் ஸாத்யர்களும் அருகில் வந்து கிருஷ்ணரை நமஸ்கரித்துப் பூஜித்தார்கள். ராஜரே! ஈசரான அந்தக் கிருஷ்ணரைத் தேவர்கள் கொண்டாடினார்கள். முனிச்ரேஷ்டர்கள் ருக்குக்களால் பூஜித்தார்கள். கந்தர்வர்கள் ஸ்தோத்திரம் செய்துகொண்டு நின்றார்கள். இந்திரன் ப்ரீதியோடு கொண்டாடினான். (தேவர்கள்), 'பகவானே! சார்ங்கமென்னும் வில்லை ஏந்தியவரே! உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். நீர் தர்மத்தை நிலைநிறுத்தவேண்டியதற்காகப் பூமியில் அவதரித்தீர். உம்மால் கம்ஸன் முதலான எல்லாத் தேவசத்துருக்களும் கொல்லப்பட்டுப் பாரத்தால்வாடின பூமியானது நிலைநிறுத்தப்பட்டது. பிரபுவே! திவ்யமும் ஜரையற்றதும் அளவிடமுடியாத மஹிமையுள்ளதும் அறியமுடியாததும் வேதங்களால் [1]அடையத் தகுந்ததும் சிறந்ததுமான ஸ்தானத்தை அடையும். ஒவ்வொரு கல்பத்திலும் பிறந்தும் இறந்தும் கஷ்டப்படும் ஜீவர்களையும் காப்பாற்றும்' (என்று சொன்னார்கள்). தேவக்கூட்டமானது இவ்வாறு சொல்லிக்கொண்டு பின்சென்று, ஸ்ரீயுடன்கூடின அவர்மீது பூமாரியைப் பொழிந்தது. ராஜரே! [2]அவர் ஸூர்யனுடைய மத்தியில் பிரவேசிக்கும்பொழுது அவ்விடமிருந்து அசரீரி வாக்கானது, 'தேவர்களே! நான்கு கைகளுடன் கூடினதும் மேன்மை பெற்றதும் ஜீவித்திருப்பதும் [3]உறுதியாக இருப்

---

1. 'அறியத் தகுந்ததும்' என்றும் கொள்ளலாம்.

2. 'ப்ரவிஷ்டம் த்ருஷ்ட்வா' என்று மாற்றப்பட்டது.

3. 'உயிரை இழந்ததும்' என்றும் கொள்ளலாம். 'உயிரை இழந்தாயினும் உயிருள்ளதுபோலவே இருக்கும் என்னுடைய சரீரத்தைப் பூஜியுங்கள்' என்றும் கருத்து விளங்குகிறது

பதும் பூமியிலிருப்பதும் அளவற்ற மஹிமையுள்ளதுமான எனனு டைய இந்தஸ்வரூபத்தைப் பூஜியுங்கள். நான், எப்பொழுதும் இதில் வாஸம் செய்கிறேன்' என்று சொல்லிற்று. பிரம்மாவை முதன்மை யாகக்கொண்டவர்களும் தேவச்ரேஷ்டர்களுமான அந்தத் தேவர்கள் அந்தப் பரமபதத்தை அடையமுடியாமல் திரும்பித் தேவனைப் பக்தி யுடன் புத்தியினால் நினைத்துக்கொண்டும் அவருடைய குணங்களைக் கீர்த்தனம் செய்துகொண்டும் சுபமான தம் தம் உலகங்களை அடைந் தார்கள்.

## ஆறுவது அத்யாயம்.

—:o:—

(தாருகன் ஹஸ்தினபுரம் சென்று யாதவரழிந்ததைப் பாண்டவர்களுக்குத் தெரிவித்ததும், அர்ஜுனன் துவாரகை சென்று ருக்மிணி முதலிய வர்களைத் தேற்றி வஸுதேவரிடம் போனதும்.)

தாருகனும் குருதேசம் சென்று மஹாரதர்களான பார்த்தர் களைக்கண்டு, 'விருஷ்ணிகள் ஒருவரோடொருவர் உலக்கையால் போர் புரிந்து உயிர் துறந்தனர்' என்று கூறினான். விருஷ்ணிகளும் போஜர்களும் அந்தகர்களும் குகுரர்களும் மரித்தார்களென்பதைக் கேட்டு, பாண்டவர்கள் சோகத்தால் வாட்டமுற்றவர்களும் மனம் நடுங் கினவர்களுமாயினர். பிறகு, வாஸுதேவருக்குப் பிரியமுள்ள தோழ னான அர்ஜுனன் அவர்களிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு அம்மானைப் பார்ப்பதற்குச் சென்றான். [1]'இது இல்லை' என்றும் சொன்னான். பிரபுவே! வீரனான அந்த அர்ஜுனன் தாருகனுடன் விருஷ்ணிகளுடைய இருப் பிடம் சென்று, கணவனை இழந்த மங்கைபோலிருக்கும் துவாரகையைப் பார்த்தான். எந்த ஸ்திரீகள் முன்பு லோகநாதரான கிருஷ்ணரைத் தலைவராகக் கொண்டவர்களாக இருந்தார்களோ அவர்கள் அப்பொழுது நாதரை இழந்தவர்களானார்கள். அவர்கள் பார்த்தனை நாதனைக்கண்டு அழுதார்கள். கிருஷ்ணருடைய மனைவிகளான பதினாறாயிரம்ஸ்திரீகளும், அர்ஜுனன் வந்ததைக்கண்டவுடன், உரக்கச்சப்தித்தனர். அர்ஜுனன், கிருஷ்ணரையும் புத்திரர்களையும் இழந்தவர்களான அந்த ஸ்திரீகளைக் கண்டவுடன், கண்ணீரால் நன்குமறைக்கப்பட்ட கண்களுள்ளவனாகி

[1] 'இப்படி நேர்ந்திராது' என்பது.

(அவைகளை)ப் பார்க்கத் திறமையற்றவனானான். சிறந்த புத்தியுள்ளவனும் இந்திர குமாரனுமான அந்த அர்ஜுனன் விருஷ்ணிகளும் அந்தகர்களுமாகிற ஜலமுள்ளதும் குதிரைகளாகிற மீன்களுள்ளதும் தேர்களாகிற தெப்பங்களுள்ளதும் வாத்தியங்கள் தேர்கள் இவற்றினுடைய கோஷமாகிற பிரவாஹமுள்ளதும் வீடுகளும் தீர்த்தங்களுமாகிற பெரிய முதலைகளுள்ளதும் ரத்தினங்களாகிற பாசிக்கூட்டங்களுள்ளதும் வஜ்ரத்தாலாகிய பிராகாரங்களின் வரிசைகளுள்ளதும் தேர்வீதிகளாகிற வெள்ளத்திலுள்ள நீர்ச்சுழல்களுள்ளதும் மடங்களாகிற அசைவற்ற மடுக்களுள்ளதும் பலராமரும் கிருஷ்ணருமாகிற பெரிய முதலைகளுள்ளதுமான துவாரகையாகிற நதியை, அப்பொழுது, விருஷ்ணிச்ரேஷ்டர்களையிழந்ததும் ஒளியும் ஆனந்தமுமற்றதும் சிசிரருதுவிலுள்ள தாமரையோடைபோன்றதும் காலபாசத்தால் பற்றப்பட்டதும் பயங்கரமான வைதரணி என்னும் நதிபோன்றதுமாகப் பார்த்தான். அர்ஜுனன் அந்தத் துவாரகையையும் கிருஷ்ணருடைய அந்த ஸ்திரீகளையும் பார்த்து அழுது கண்ணீர் சொரிந்து பூமியில் விழுந்தான். ராஜரே! பிறகு, ஸத்ராஜித்தின் புத்திரியான ஸத்யபாமையும் ருக்மிணியும் நேரில்வந்து தனஞ்சயனைச் சூழ்ந்துகொண்டு அழுதார்கள். பிறகு, (அந்தஸ்திரீகளெல்லாரும்) அந்த அர்ஜுனனை எழுப்பிப் பொற்பீடத்தில் வீற்றிருக்கச் செய்து மஹாத்மாவான அவனைக் கொண்டாடிச் சூழ்ந்து நின்றார்கள். பிறகு, அர்ஜுனன் வாஸுதேவரை ஸ்தோத்திரம் செய்தும் (அவருடைய பெருமையைச்) சொல்லியும் அந்தஸ்திரீகளைத் தேறுதலடையும்படி செய்து அம்மானைப் பார்க்கச் சென்றான்.

## ஏழாவது அத்யாயம்.

———:o:———

**(வஸுதேவர் யாதவாழிவுக்குக் காரணத்தை அர்ஜுனனுக்குக்கூறிப் புலம்பியதும், கிருஷ்ணர் சொல்லியதை அர்ஜுனனிடம் சொல்லி ராஜ்யத்தையும் ஒப்பித்துத் தாம் உயிர்விட நிச்சயித்ததும்.)**

புத்திர சோகத்தினால் மிகத் தபிக்கப்பட்டவரான வஸுதேவர், வருகின்றவனும் மஹாத்மாவும் வீரனும் கௌரவச்ரேஷ்டனுமான அந்த அர்ஜுனனைப் பார்த்தார். பாரதரே! கண்ணீர் நிறைந்த கண்களுள்ளவனும் விசாலமான மார்புள்ளவனும் நீண்ட கைகளுள்ளவனும் மிக்க மனவருத்தமுற்றவனுமான அர்ஜுனன், துயரமுற்றிருக்கும்

அந்த வஸுதேவருடைய இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டான். பகைவரைக் கொல்பவரே! சிறந்த கைகளுள்ளவரான வஸுதேவர் ஸஹோதரியின் புத்திரனை அந்த அர்ஜுனனுடைய சிரத்தை மோக்க விரும்பினர்; ஆனாலும், அவரால் முடியவில்லை. பிறகு, வயது முதிர்ந்தவரும் சிறந்த கைகளுள்ளவரும் மிக்க தளர்ச்சியுள்ளவருமான அந்த வஸுதேவர் இருகைகளாலும் அர்ஜுனனைக் கட்டிக்கொண்டு கிருஷ்ணரையும் பிராதாக்களையும் புத்திரர்களையும் பௌத்திரர்களையும் தௌஹித்ரர்களையும் தோழர்களையும் நினைத்து அழுதார். வஸுதேவர், 'அர்ஜுன! எவர்கள் நூற்றுக்கணக்கான மன்னர்களையும் அஸுரர்களையும் ஜயித்தார்களோ அவர்களெல்லாரையும் நான் இப்பொழுது பார்க்கவில்லை. அர்ஜுன! மரிக்க முடியாமல் ஜீவித்திருக்கிறேன். அர்ஜுன! பார்த்த! உனக்குப் பிரியர்களும் எப்பொழுதும் கௌரவிக்கப்பட்டவர்களுமான எந்த இரண்டு சிஷ்யர்களுண்டோ அவர்களுடைய அக்ரமத்தினால் விருஷ்ணிகள் மரணமடைந்தார்கள். கௌரவஶ்ரேஷ்டனே! தனஞ்சய! பிரத்யும்னன் யுயுதானன் என்னும் எந்த இருவர்களுமே சிறந்த விருஷ்ணி வீரர்களுள் அதிரதர்களாக ஒப்புக்கொள்ளப்பட்டவர்களோ, நீ பேசும்பொழுது எவர்களைப் பற்றிப் புகழ்வாயோ, எப்பொழுதும் கிருஷ்ணனுடைய பிரீதிக்குப் பாத்திரர்களான அவ்விருவர்களும் விருஷ்ணிகள் அழியக் காரணமாயினர். அர்ஜுன! நான் ஸாத்யகியையும் கிருதவர்மாவையும் அக்ரூரரையும் பிரத்யும்னனையும் நிந்திக்கவில்லை. இது விஷயத்தில் சாபமே காரணமன்றோ? பார்த்த! கேசியையும் கம்ஸனையும் பராக்கிரமத்தினால் கொன்றவனும் பலத்தால் செருக்குள்ள சேதிதேசத்தரசனை சிசுபாலனையும் வேடனை ஏகலவ்யனையும் கலிங்கர்களையும் மாகதர்களையும் காந்தாரர்களையும் காசிராஜனை பௌண்ட்ரகனையும் பாலைவனத்திலிருந்த மன்னர்களையும் கீழ்த்திசையிலும் தென்திசையிலும் மலைநாட்டிலுமிருந்த மன்னர்களையும் கொன்றவனும் பிரபுவுமான அந்த வாஸுதேவன் இவ்விதம் அக்ரமமாக உபேக்ஷை செய்துவிட்டான். நீயும் நாரதரும் முனிவர்களும் அவனை ஸநாதனரும் கோவிந்தரும் தோஷமற்றவரும் அச்சுதருமான தேவரென்று அறிவீர்கள். விபுவும் [1]அதோக்ஷஜருமான அவர், தாம் எப்பொழுதும் எனக்கு அருமைப் புத்திரரும் ஞாதிகளின் நாசத்தை அறிந்தவருமாயிருந்தும் உபேக்ஷை

1. அநுசாஸனபர்வம் விஷ்ணுஸஹஸ்ரநாமம் 'அதோக்ஷஜ' என்னும் நாம உரை பார்க்க; (பக்கம்

செய்துவிட்டார். பகைவரை வாட்டுபவனே! உலகத்திற்குப் பிரபுவான அவர் காந்தாரியினுடைய வசனத்தையும் ரிஷிகளுடைய வசனத்தையும் மாற்றுவதற்கு விரும்பவில்லையென்பது நிச்சயம். பகைவரை வாட்டுபவனே! உன்னுடைய பேரன் அஸ்வத்தாமாவினால் கொல்லப்பட்டிருந்தும் அவருடைய தேஜஸினால் பிழைத்தது உனக்கும் நேரில் தெரியும். உன்னுடைய நண்பரான அவர் இந்தத் தமது ஞாதிகளை மட்டும் ரக்ஷிக்க விரும்பவில்லை. கேசவர் புத்திரர்களும் பௌத்திரர்களும் பிராதாக்களும் ஸ்நேகிதர்களும் கொல்லப்பட்டுப் படுத்திருப்பதைப் பார்த்துவிட்டு, பிறகு, என்னை நோக்கிப் பின்வரும் வசனத்தைச் சொல்லலானார். 'இப்பொழுது, இந்தக் குலத்திற்கு இவ்விதமான முடிவு நேர்ந்துவிட்டது. [1]பரதஸ்ரேஷ்டனான அர்ஜுனன் இந்தத் துவாரகாநகரத்திற்கு வரப்போகிறான். அவனிடத்தில் விருஷ்ணிகளுக்கு நேர்ந்த பெரிய நாசத்தைச் சொல்லவேண்டும். பிரபுவே! சிறந்த பராக்ரமமுள்ளவனான அவனே யாதவர்களுக்கு நேர்ந்த மரணத்தைக் கேட்டுச் சீக்கிரமாகவே இங்கு வருவான். இதில் எனக்கு ஆலோசனை இல்லை. என்னை அர்ஜுனனாகவும் அர்ஜுனனை நானாகவும் தெரிந்துகொள்ளும். [2]பாரதனான அர்ஜுனன் எதைச் சொல்வானோ அதை அவ்விதமே செய்யவேண்டுமென்று தெரிந்து கொள்ளும். அந்தப் பாண்டவனான அர்ஜுனன், காலஞ்சென்றவர்களான ஸ்திரீகளுக்கும் பாலர்களுக்கும் உமக்கும் ச்ராத்தம் முதலியவற்றைச் செய்வான். அர்ஜுனன் (இந்த நகரத்தை விட்டுச்) சென்றவுடன், பிராகாரங்களோடும் உப்பரிகைகளோடும் கூடின இந்த நகரத்தை ஸமுத்திரம் முழுகச் செய்யப்போகிறது. நான் இப்பொழுதே பலராமருடன் வனத்தில் புண்யமான ஓர் இடத்தில் நியமத்தை ஆச்ரயித்துக்கொண்டு காலத்தை விரும்புகிறேன்' என்று சொன்னார். சிந்திக்கமுடியாத பராக்ரமமுள்ளவரும் பிரபுவுமான ஹ்ருஷீகேசர் என்னிடம் இவ்வளவு சொல்லிவிட்டுப் பாலர்களுடன் என்னை விட்டுவிட்டு ஏதோ ஒரு திசையை நோக்கிச் சென்றார். நான் மஹாத்மாக்களான அந்தப் பலராமகிருஷ்ணர்களையும் கோரமான ஞாதிகளின் மரணத்தையும் சிந்தித்துக்கொண்டு சோகத்தால் மெலிந்து, போஜனம் செய்யாமலிருக்கிறேன். பாண்டவ! நான் (இந்தத் துயரத்திலிருந்து) விடப்படப்போகிறதில்லை; ஜீவித்திருக்கப்போகிறதுமில்லை. நீ தெய்வச் செயலாக வந்தாய். பார்த்த! கேசவர் எதைச் சொன்னாரோ

1. 'பரதர்ஷப:' என்று மாற்றப்பட்டது.

2. பொருந்தாமையால், 'பாரத:' என்று மாற்றப்பட்டது,

அதையெல்லாம் முழுதும் செய். பார்த்த! இந்த ராஜ்யமும் ஸ்திரீகளும் ரத்தினங்களும் உன்னுடையவைகள். பகைவரை அழிப்பவனே! நானோ பிரியமான இந்தப்பிராணனை விடப்போகிறேன்' என்று கூறினார்.

## எட்டாவது அத்யாயம்.

———:o:———

(அர்ஜுனன் வஸுதேவரைத் தேற்றி யாவரையும் இந்திரப்ரஸ்தஞ் செல்லச் சொல்லியதும். வஸுதேவர் யோகத்தால் சரீரத்தை விட்டதும், அர்ஜுனன் வஸுதேவர் கிருஷ்ணர்முதலியவர்களை அடக்கஞ்செய்து புறப்பட்டதும், வழியில் திருடர்கள் கொள்ளையிட்டதும், அர்ஜுனன் வஜ்ரன் முதலியவர்களுக்கு முடிசூட்டியதும், ருக்மிணி முதலியோர் தீக்குளித்ததும், ஸத்யபாமைமுதலியோர் தவத்துக்குச் சென்றதும்.)

பகைவரை வாட்டுபவரே! மாதுலரால் இவ்விதம் சொல்லப்பட்டவனான அந்த அர்ஜுனன், மனவருத்தமுற்று வாடின முகத்துடன் அவரை நோக்கி, 'மாதுலரே! பிரபுவே! விருஷ்ணிகளுள் சிறந்த வீரரான வாஸுதேவரையும் உறவினர்களையும் இழந்ததான பூமியை நீண்டகாலம் பார்த்துக்கொண்டிருக்க என்னால் முடியாது. யுதிஷ்டிரராஜரும் பீமஸேனனும் பாண்டவனான ஸஹதேவனும் நகுலனும் திரௌபதியும் (நானும்) ஆகிய நாங்கள் அறுவரும் ஒரே மனமுள்ளவர்கள். மன்னருக்கும் சேர்ந்திருக்கும் விஷயத்தில் இந்த எண்ணம் எப்பொழுதுமே உண்டு. காலத்தை அறிந்தவருள் சிறந்தவரே! அதற்கு இப்பொழுது ஸமயம் நேர்ந்ததாகத் தெரிந்துகொள்ளும். பகைவரை அடக்குபவரே! நான் விருஷ்ணிகளின் மனைவிகளையும் [1]பாலர்களையும் [2]வ்ருத்தர்களையும் எல்லாவிதத்தாலும் இந்திரப்பிரஸ்தத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறேன்' என்று சொன்னான். அர்ஜுனன் இவ்விதம் சொல்லிவிட்டுத் தாருகனை நோக்கி, 'விருஷ்ணி வீரர்களுடைய மந்திரிகளைச் சீக்கிரத்தில் பார்க்க விரும்புகிறேன்' என்ற இந்த வாக்கியத்தைக்கூறினான். சூரனும் நீண்டகைகளுள்ளவனுமான அர்ஜுனன் இவ்விதமான வசனத்தைச்சொல்லிவிட்டு, ஸுதர்மையென்னும் யாதவர்களுடைய ஸபையில் துயரத்துடன் பிரவேசித்தான். அப்பொழுது, அவ்விடத்தில் ஆஸனத்தில் வீற்றிருக்கும் அவனை எல்லாமந்திரிக

1, 2. மூலத்தில் ஒருமையாக இருக்கின்றன.

ளும் நகரவாஸிகளான பிராம்மணர்களும் சூழ்ந்துகொண்டு நின்றார்கள். எளிமையுற்ற மனத்தையுடையவர்களும் மிக்கமதிமயக்கம் கொண்டவர்களும் அறிவைஇழந்தவர்களுமான அவர்களனைவரையும் நோக்கி, அவ்வாறே மிக்க தீனனாயிருக்கும் அர்ஜுனன், காலத்திற்கேற்றிருக்கும் பின்வரும்வசனத்தைக் கூறலானான். 'நான் விருஷ்ணிகளையும் அந்தகர்களையும்சேர்ந்த ஜனத்தை நேரில் இந்திரப்பிரஸ்தத்திற்கு அழைத்துக்கொண்டுபோவேன். இந்நகரத்தையோ முழுதும் கடல் முழுகச்செய்யப்போகிறது. வாகனங்களையும் பலவித ரத்தினங்களையும் ஸித்தம்செய்துகொள்ளுங்கள். [1]வஜ்ரனென்னும் இவன் உங்களுக்கு இந்திரப்பிரஸ்தத்தில் அரசனாவான். ஏழாவதுதினம் ஸூர்யன் பிரகாசமாக உதிக்கும்பொழுது நாமெல்லாரும் வெளியில் வஸிக்கவேண்டும். ஸித்தமாக இருங்கள். தாமதம் வேண்டாம்' என்று கூறினான். பிறகு, பிறரைத் துன்புறுத்தும் காரியம் செய்யாத அந்த அர்ஜுனனால் இவ்விதம் சொல்லப்பட்ட அவர்களெல்லாரும் தமதுநன்மையில் ஆவலுற்று உடனே (எல்லாவற்றையும்) ஸித்தம் செய்தார்கள். அர்ஜுனன் அன்றிரவு பெரிய சோகத்தாலும் மோகத்தாலும் விரைந்து கவரப்பட்டவனாகிக் கிருஷ்ணருடைய அரண்மனையில் வஸித்தான். பிறகு, மறுநாள் விடிந்தவுடன், சூரருடைய புத்திரரும் பிரதாபமுள்ளவரும் மிக்க தேஜஸ்வியானவருமான வஸுதேவர் ஆத்மாவை யோகத்தில்செலுத்தி உத்தமமானகதியை அடைந்தார். பிறகு, வஸுதேவருடைய வீட்டில் அலறிஅழுகின்ற ஸ்திரீகளுடைய பயங்கரமான பெரியசப்தம் தோன்றிற்று. ஸ்திரீகளெல்லாரும் விரித்தகூந்தலுள்ளவர்களும் அணிகளையும் மாலைகளையும் இழந்தவர்களுமாகிக் கைகளால் மார்பில் அடித்துக்கொண்டு தீனமாகப் புலம்பினார்கள். ஸ்திரீகளுள் சிறந்தவர்களான தேவகியும் பத்ரையும் ரோஹிணியும் மதிரையும் அந்தப் பர்த்தாவுடன் (சிதையில்) ஏற நிச்சயித்தார்கள். பாரதரே! பிறகு, பார்த்தன் மனிதர்களால் தூக்கப்படுவதும் மிக்க விலைபெற்றதும் சிறந்ததுமான விமானத்தால் வஸுதேவரை அப்பொழுது வெளியில் கொண்டுபோகும்படி செய்தான். துவாரகையில் வஸிப்பவர்களும் பட்டணத்தார்களும் தேசத்தார்களுமான ஹிதர்களான ஜனங்களெல்லாரும் துக்கத்துடனும் சோகத்துடனும் கூடியவர்களாக அந்த விமானத்திற்குப் பின்சென்றார்கள். அச்வமேதத்திற்குஉபயோகிக்கும் குடையும் ஜ்வலிக்கின்ற அக்னிகளும் புரோஹிதர்களும் அந்த விமா

1. கிருஷ்ணபுத்ரன் பிரத்யும்னன்; பிரத்யும்னன்புத்ரன் அநிருத்தன்; அநிருத்தன்புத்ரன் வஜ்ரன்.

னத்திற்கு முன்னால்சென்றார்கள். அந்தத் தேவிகளும் நன்கு அலங்கரிக்கப்பட்டவர்களும் ஆயிரக்கணக்கான ஸ்திரீகளாலும் ஆயிரக்கணக்கான மருமகள்களாலும் சூழப்பட்டவர்களுமாக அந்தவீரரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். மஹாத்மாவான அவருக்கு ஜீவித்திருக்கும்பொழுது எந்தஇடம் பிரியமாயிருந்ததோ அந்தஇடத்தில் அவரைவைத்துப் பித்ருமேதத்தைச்செய்தார்கள். பிறகு, உத்தம ஸ்திரீகளும் பர்த்தாவின் உலகத்தை அடைகின்றவர்களுமான (அந்த) நான்குபத்தினிகளும், சிதாக்னியை அடைந்திருப்பவரும் வீரரும் சூரகுமாரருமான அந்தவஸுதேவருடன் (சிதையில்) ஏறினார்கள். பாண்டு நந்தனனான அர்ஜுனன் நான்கு பத்தினிகளுடன்கூடின அவரைச் சந்தனக்கட்டைகளாலும் பலவிதமான வாஸனைத் திரவியங்களாலும் எரியும்படி செய்தான். பிறகு, நன்கு ஜ்வலிக்கின்ற அக்னியினுடைய சப்தமும் ஸாமகர்களுடைய கோஷமும் அழுகின்ற மனிதர்களுடைய சப்தமும் தோன்றின. பிறகு, வஜ்ரனை முதன்மையாகக்கொண்டவர்களான அந்த எல்லா விருஷ்ணி குமாரர்களும் அந்தக குமாரர்களும் ஸ்திரீகளும் மஹாத்மாவான வஸுதேவருக்கு உதகதர்ப்பணம் செய்தார்கள். பரதஸ்ரேஷ்டனே! தர்மம் கெடாதவனான அந்த அர்ஜுனன் அந்தத் தர்மத்தைச் செய்வித்துவிட்டு விருஷ்ணிகள் எந்த இடத்தில் மரித்தார்களோ அவ்விடம் சென்றான். குருகுலத்திலுதித்தவனான அந்த அர்ஜுனன், விழுந்து கிடக்கும் அவர்களைப்பார்த்து (அவர்கள்) மரித்தவிஷயத்தில் மிக்கஅதிகமான துக்கமுள்ளவனாகி அப்பொழுது செய்யவேண்டியதைச் செய்தான்; பிராம்மணசாபத்தால் ஏரகங்களால் உண்டான உலக்கைகளால் கொல்லப்பட்ட அவர்களுக்கு, முக்யமானவர்களுக்கு முன்முன் செய்வதென்னும் முறைப்படி எல்லாக் கிரியைகளையும் செய்தான். பிறகு, சிஷ்யனான அர்ஜுனன் பகவானுடைய சரீரத்தைப் பார்த்துப் புலம்பி அவருடைய வசனத்தை முழுதும் நினைத்து மோஹமும் சோகமும் மேலிட்டவனானான். பிறகு, பலராமர் கிருஷ்ணர் இருவர்களுடையசரீரங்களையும் பார்த்து ஆப்தர்களாகக் காரியம் செய்யும் மனிதர்களைக்கொண்டு (அவற்றை) எரிக்கும்படி செய்தான். அந்த அர்ஜுனனானவன் அவர்களுக்கு விதிப்படி பித்ருகாரியங்களைச் செய்துவிட்டு ஏழாவது தினத்தில் ரதத்தின்மீது ஏறிக்கொண்டு, குதிரைகள் பூட்டியவைகளும் காளைகள் கழுதைகள் ஒட்டகங்கள் இவைகளுடன் கூடினவைகளுமான ரதங்களுடன் வேகமாகச் சென்றான். சோகத்தால் மெலிந்தவர்களான விருஷ்ணிவீரர்களுடைய அந்த ஸ்திரீகளும் அழுதுகொண்டு மஹாத்

மாவும் பாண்டுபுத்திரனுமான அர்ஜுனனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அந்தகர்கள் விருஷ்ணிகள் இவர்களுடைய வேலைக்காரர்களும் குதிரைவீரர்களும் ரதிகர்களும் பட்டணத்துஜனங்களும் தேசத்து ஜனங்களும் பாலர்களும் வ்ருத்தர்களும் (காப்பாற்றக்கூடிய) வீரர்களில்லாதவர்களாகி (அந்தக வ்ருஷ்ணிகளுடைய) மனைவிகளைச் சூழ்ந்துகொண்டு சென்றார்கள். அவ்வாறே, யானைவீரர்கள் பர்வதத்திற்கொப்பானவைகளும் பாதரக்ஷகர்களோடு கூடினவைகளுமான யானைகளோடு கூடினவர்களும் சிறந்த போர்வீரர்களோடு கூடினவர்களுமாகச் சென்றார்கள். அந்தகர்கள் விருஷ்ணிகள் இவர்களுடைய எல்லாப் புத்திரர்களும் மிக்க தனிகர்களான பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைஸ்யர்களும் சூத்திரர்களும் அர்ஜுனனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். வாஸுதேவரான கிருஷ்ணருடைய பதினாறாயிரம் மனைவிகளும் புத்திசாலியான அவருடைய பேரனுக்கு மகனான [1]வஜ்ரனை முன்னிட்டுக்கொண்டு சென்றார்கள். பர்த்தாக்களை இழந்தவர்களான போஜர்கள் விருஷ்ணிகள் அந்தகர்கள் இவர்களுடைய ஸ்திரீகளும் பல்லாயிரக் கணக்காகவும் பதது லக்ஷக்கணக்காகவும் பத்துக் கோடிக்கணக்காகவும் வெளியே புறப்பட்டனர். ஸமுத்திரத்திற்கொப்பாக விளங்குகின்றதும் மிக்க செல்வம் நிறைந்ததுமான அந்த விருஷ்ணிக் கூட்டத்தை ரதிகர்களுள் சிறந்தவனும் பகைவரின் பட்டணங்களை ஜயிப்பவனுமான அர்ஜுனன் அழைத்துச் சென்றான். அப்பொழுது, அந்த ஜனங்கள் வெளியில் சென்றவுடன், மகரங்களுக்கு இருப்பிடமான ஸமுத்திரமானது ரத்தினங்கள் நிறைந்த துவாரகையை ஜலத்தால் முழுகச் செய்தது. புருஷஸ்ரேஷ்டனான அர்ஜுனன் பூமியினுடைய எந்த எந்த இடத்தை விட்டானோ அந்த அந்த இடத்தை அந்த ஸமுத்திரமானது ஜலத்தால் முழுகச் செய்தது. அந்த ஆச்சரியத்தைக் கண்டு துவாரகாவாஸிகளான ஜனங்கள் 'ஓ! ஓ! தெய்வமே' என்று சொல்லிக்கொண்டு மிக்க வேகமாகச் சென்றார்கள். அர்ஜுனன் அழகான கானகங்களிலும் மலைகளிலும் நதிகளிலும் தங்கியிருந்து விருஷ்ணிகளுடைய மனைவிகளை அழைத்துச் சென்றான். பிரபுவும் புத்திசாலியுமான அவன் மிக்க செல்வம் நிறைந்த பஞ்சநதத்தை அடைந்து காளைகளும் பசுக்களும் தான்யங்களும் நிறைந்ததான (அந்தக்) தேசத்தில் வஸித்தான். பாரதரே! பிறகு, பார்த்தனொருவனால் அழைத்துக்கொண்டு போகப்படுகின்றவர்

1. இவன் அநிருத்தனுக்கு மகன்: மூலத்தில் 'பௌத்ர' என்றிருக்கிறது; 'ப்ரபௌத்ரம்' என்றிருக்கவேண்டும். 20-ம் பக்கம் குறிப்பில் காண்க.

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE
MYLAPORE, CHENNAI-4



களும் பர்த்தாக்களை இழந்தவர்களுமான ஸ்திரீகளைப் பார்த்துத் திருடர்களுக்கு ஆசையுண்டாயிற்று. பிறகு, பாபச் செய்கையுள்ளவர்களும் ஆசையால் கெடுக்கப்பட்ட சித்தமுள்ளவர்களும் அமங்களமான காட்சியுள்ளவர்களுமான அந்த வேடர்கள் ஒன்றுசேர்ந்து, 'வில்லாளியான இந்த அர்ஜுனன் ஒருவன், பர்த்தாக்களை இழந்தவர்களான கிழவிகளையும் சிறுமிகளையும் நம்மைமீறி அழைத்துச்செல்லுகிறான். இந்தப் போர்வீரர்களும் பலமற்றவர்களாக இருக்கின்றனர்' என்று ஆலோசித்தார்கள். பிறகு, ஆயிரக்கணக்கான அந்தத் திருடர்கள் பொருளைத் திருடுவதற்காகத் தடிகளை ஆயுதமாகக்கொண்டு விருஷ்ணிகளைச் சார்ந்த அந்த ஜனத்தை எதிர்த்துச் சென்றார்கள். அவர்கள் காலத்தின் மாறுதலால் தூண்டப்பட்டுப் பெரிய ஸிம்மநாதத்தால் பாமரஜனத்தை பயப்படுத்திக் கொண்டு தனத்திற்காக் எதிர்த்துச் சென்றார்கள். பிறகு, சிறந்த கைகளுள்ளவனும் குந்தியின் குமாரனுமான அர்ஜுனன் அனுசரர்களுடன் விரைவில் திரும்பி அவர்களை நோக்கி நகைத்துக்கொண்டு, 'தர்மத்தை அறியாதவர்களே! உங்களுக்கு ஜீவித்திருக்க விருப்பமிருந்தால் திரும்புங்கள்; (இல்லையேல்) இப்பொழுது என்னால் பாணங்களால் அடித்துப் பிளக்கப்பட்டுத் துக்கப்படுவீர்கள்' என்று கூறினான். அந்த வீரனால் அவ்வாறு சொல்லப்பட்ட (அந்த) மூடர்கள் அந்த வார்த்தையை அலக்ஷ்யம் செய்து, அடிக்கடி தடுக்கப்பட்டும், (அந்த) ஜனங்களை எதிர்த்துச் சென்றார்கள். பிறகு, அர்ஜுனன் திவ்யமும் மடித்துப்போகாததும் சிறந்ததுமான காண்டீவம் என்னும் வில்லை மிக்க பிரயாசைப்பட்டு நாண்பூட்டத்தொடங்கினான். நெருங்கினபோரில் மிக்க பரபரப்பான ஸமயம் நேர்ந்திருக்கும்பொழுது, சிரமப்பட்டு நாண்பூட்டினான். அஸ்திர மந்திரங்களை ஆலோசித்தான். அவைகளும் நினைவுக்கு வரவில்லை. அவன், யுத்தத்தில் சிறந்ததான அந்தப் புஜபராக்ரமமானது அவ்விதம் மாறியிருப்பதைக்கண்டும், திவ்யமான சிறந்த அஸ்திரங்கள் மறந்துபோனமையினாலும், வெட்கமடைந்தான். யானைகளாலும் குதிரைகளாலும் தேர்களாலும் போர்புரிகின்றவர்களான விருஷ்ணிகளைச் சார்ந்த அந்த எல்லாப் போர்வீரர்களும் அபஹரிக்கப்படுகின்ற தம் தனத்தைத் திருப்புவதற்குத் திறமையற்றவர்களானார்கள். அர்ஜுனன் (விருஷ்ணிகளுடைய மனைவிகள்) அதிகமாக இருப்பதால் (திருடர்கள்) ஆங்காங்கு வரும்பொழுது (அந்த) ஜனத்தை ரக்ஷிப்பதில் முயற்சி செய்தான். பிறகு, எல்லாயுத்தவீரர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அந்த உத்தம ஸ்திரீகள் நான்கு பக்கத்திலும் இழுக்கப்பட்

டார்கள். மற்றவர்கள் இஷ்டப்படி ஓடினார்கள். பிறகு, குந்தியின் மைந்தனை அர்ஜுனன் மனவருத்தமுற்று விருஷ்ணிகளின் வேலைக்காரர்களுடன்சேர்ந்து காண்டீவத்தினின்று விடப்பட்டபாணங்களால் திருடர்களை ஆயிரக்கணக்காகக்கொன்றான். அரசரே! அவனுடைய அந்தப் பாணங்கள் க்ஷணத்தில் க்ஷயத்தை அடைந்துவிட்டன. உதிரத்தைப் போஜனமாகக்கொண்ட அவைகள் முன் அக்ஷயமாக இருந்து (அப்பொழுது) க்ஷயத்தை அடைந்தன. இந்திரகுமாரனை அவன் பாணங்களுடையநாசத்தை அடைந்து துக்கமும் சோகமும் மேலிட்டவனாகி அப்பொழுது வில்லின் முனையினால் திருடர்களைக் கொன்றான். ஜனமேஜயரே! அந்த மிலேச்சர்கள் அர்ஜுனன் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே விருஷ்ணிகள் அந்தகர்கள் இவர்களின் ஸ்திரீகளைத் தூக்கிக்கொண்டு நான்கு பக்கத்திலும் சென்றுவிட்டார்கள். பிரபுவான தனஞ்சயனோ, அது தெய்வகாரியமென்று மனத்தில் எண்ணித் துக்கமும் சோகமும் மேலிட்டுப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தான். அரசரே! அர்ஜுனன் அஸ்திரங்களுடைய நாசத்தினாலும் புஜபலத்தின் குறைவினாலும் வில்லானது வசப்படாமலிருப்பதினாலும் பாணங்களின் நாசத்தினாலும் (இது) தெய்வச்செயலென்றெண்ணி மனவருத்தத்துடன் 'இது இல்லை' யென்று எண்ணிக்கொண்டு அவ்விடமிருந்து திரும்பினான். பிறகு, சிறந்த புத்தியுள்ளவனான அர்ஜுனன் மிகுதியான ரத்தினங்களைப் பறிகொடுத்து மிச்சமுள்ள விருஷ்ணிஸ்திரீகளை அழைத்துக்கொண்டு குருக்ஷேத்திரம் வந்திறங்கினான். குருகுலத்தில் தோன்றியவனான தனஞ்சயன் யுதிஷ்டிரருடைய ஸம்மதத்தின்மேல் வம்சத்திற்குக் கர்த்தாக்களான குமாரர்களை ஆங்காங்கு ஸ்தாபனம் செய்தான். அர்ஜுனன் கிருதவர்மாவினுடைய புத்திரனை மிருத்திகாவதமென்னும் நகரத்திலும் அச்வபதியைக் காண்டவவனமென்னும் அந்த ராஜ்யத்திலும் ஸ்தாபனஞ்செய்தான். நரோத்தமனான பாண்டவன், அபஹரிக்கப்பட்டவர்கள் போக மிச்சமுள்ளவர்களான போஜராஜன் மனைவியையும் அவ்வாறே விருத்தர்களையும் பாலர்களையும் ஸ்திரீகளையும் அழைத்துக்கொண்டுவந்து வீரர்களை இழந்தவர்களான அவர்களனைவரையும் இந்திரப்பிரஸ்தத்தில் ஸ்தாபனம் செய்தான். தர்மாத்மாவான தனஞ்சயன் யுயுதானனென்னும் ஸாத்யகியின் பிரியமான புத்திரனை விருத்தர்களையும் பாலர்களையும் முன்னிட்டு ஸரஸ்வதி நதிக்கரையில் ஸ்தாபனம் செய்தான். சத்துருவீரர்களை அழிப்பவனான அர்ஜுனன் வஜ்ரனுக்கு இந்திரப் பிரஸ்தத்தில் ராஜ்யத்தைக் கொடுத்தான்.

அக்ரூரருடைய மனைவியானவள், வஜ்ரனால் தடுக்கப்பட்டும், துறவியானாள். பிறகு, ருக்மிணியும் [1]காந்தாரியும் [2]சைப்யையும் [3]ஹைமவதி என்பவளும் ஜாம்பவதிதேவியும் அக்னியில் பிரவேசித்தார்கள். ராஜரே! ஸத்யபாமையும் அவ்வாறே கிருஷ்ணருடைய பிரியமான மற்றத்தேவிமார்களும் தவம்புரிவதில் நிச்சயம்செய்துகொண்டு வனத்திற்குச் சென்றனர். துவாரகாவாஸிகளான எந்தப் புருஷர்கள் அர்ஜுனனுடன் வந்தார்களோ அவர்களை அர்ஜுனன் தகுதிக்குத் தக்கவாறு பிரித்து வஜ்ரனிடத்தில் ஒப்புவித்தான். கண்ணீரால் மறைக்கப்பட்ட கண்களுள்ள அந்த அர்ஜுனன் காலத்திற்கேற்ற அந்தக் காரியத்தைச் செய்துவிட்டு ஆஸ்ரமத்தில் வீற்றிருக்கும் கிருஷ்ணத்வைபாயனரென்னும் வியாஸரைப் பார்த்தான்.

## ஒன்பதாவது அத்யாயம்.

—:o:—

(அர்ஜுனன் வியாஸரைக்கண்டு துவாரகையின் அழிவைக் கூறியதும், யுதிஷ்டிரர்முதலியவரும் ஸ்வர்க்கமடையக் கடவரென்று வியாஸர் குறிப்பித்ததும், அர்ஜுனன் யுதிஷ்டிரரிடம் துவாரகையின்செய்தி கூறியதும்.)

அரசரே! அர்ஜுனன், ஸத்யவாதியான வியாஸருடைய ஆஸ்ரமத்தில் பிரவேசித்து ஏகாந்தத்தில் வீற்றிருப்பவரும் ஸத்யவதியின் புத்திரருமான வியாஸரைப் பார்த்தான். பிறகு, அர்ஜுனன் தர்மத்தை அறிந்தவரும் சிறந்தவிரதமுள்ளவருமான அவருக்கருகில் சென்று நின்று, 'நான் அர்ஜுனன்' என்று சொல்லி அவரை நமஸ்கரித்தான். ஸத்யவதியின் புத்திரரான வியாஸமுனிவர், 'உனக்கு நல்வரவாகுக' என்று சொன்னார். கலக்கமற்ற மனத்தையுடைய மஹாமுனிவர், 'உட்காரு' என்றும் சொன்னார். வியாஸர், மனத்தில் ஸந்தோஷமற்றவனும் அடிக்கடி பெருமூச்சுவிடுகின்றவனும் மனத்துயரமுற்றவனுமான அந்த அர்ஜுனனைப் பார்த்து, ('அர்ஜுன!) நீ நகம் கேசம் வஸ்திரத்தின் நுனி [4]குடத்தின்வாய் இவற்றிலிருந்து கிளம்பின ஜலத்தினால் நனைக்கப்பட்டாயா? அல்லது, வீட்டுக்கு விலக்காயிருக்கும் ஸ்திரீயைச் சேர்ந்தாயா? பிராம்மணனைக் கொன்றாயா? அல்லது, போரில் வெல்லப்பட்டாயா?

1. 2. 3. கிருஷ்ண பத்னிகள்.

4. ஸ்நானம் செய்யும்போதும் பானம் செய்யும்போதும் குடத்துநீரில் சிறிதுகொட்டிவிட வேண்டுமென்பது சாஸ்திரம். இது, பிறர் உபயோகித்த சேஷத்தின் தோஷத்தைப் போக்குவதாம்.

சோபையை இழந்தவன்போலக் காணப்படுகிறாயே? பரதஸ்ரேஷ்டனே! உன்னைத் தோல்வியடைவிக்கப்பட்டவனாக நான் அறியவில்லை. இது என்ன? நான் கேட்கக்கூடுமானால் சீக்கிரம் சொல்லு' என்று வினவ, அர்ஜுனன் சொல்லத் தொடங்கினான். 'மேகம்போன்ற சரீரமுள்ளவரும் ஸ்ரீமானும் பெரிய தாமரைமலர்போன்ற கண்களுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ணர், பலராமருடன் சரீரத்தை விட்டுவிட்டுப் பரமபதம் சென்றுவிட்டார். சிறந்த புத்தியுள்ளவரே! நான் அதனை நினைத்து எப்பொழுதும் மதிமயக்கத்தையும் சோகத்தையும் அடைகிறேன். எனக்கு மூர்ச்சை உண்டாகிறது. அமிருதம்போன்ற ஸ்வபாவமுள்ளவரும் தேவதேவருமான அவருடைய ஸம்பாஷணம் ஸ்பரிசம் தர்சனம் இவற்றாலுண்டானதும் அமிருதத்திற்கொப்பானதுமான அந்த ஸுகத்தை நினைத்து என் புத்தி மயங்குகிறது. விருஷ்ணிவீரர்களுக்குப் பிரபாஸத்தில் உலக்கைச் சண்டையில் ப்ராம்மண சாபத்தால் உண்டானதும் வீரர்களுக்கு முடிவைச் செய்வதும் மயிர்க்கூச்சத்தை உண்டுபண்ணுகின்றதுமான விநாசம்உண்டாயிற்று. பிராம்மணரே! சூரர்களும் மஹாத்மாக்களும் ஸிம்மம்போலக் கொழுப்புள்ளவர்களும் மிக்க பலமுள்ளவர்களுமான இந்தப்போஜர்களும் விருஷ்ணிகளும் அந்தகர்களும்யுத்தத்தில் அந்த உலக்கைகளால் ஒருவரையொருவர் கொன்றார்கள். கதாயுதங்களையும் பரிகங்களையும் சக்திகளையும் ஸஹிப்பவர்களும் பரிகம்போன்ற கைகளுள்ளவர்களுமான அவர்கள் ஏரகங்களால் கொல்லப்பட்டார்கள். காலத்தினுடைய மாறுதலைப் பாரும்! கைகளால் விளங்குகின்றவர்களான அவர்கள் ஐந்துலக்ஷம் பேர்கள் ஒருவரையொருவர் நெருங்கி அடித்துக்கொண்டு மரணத்தை அடைந்தார்கள். அளவற்ற பராக்ரமமுள்ளவர்களான யாதவர்களுடைய விநாசத்தையும் புகழ்பெற்றவரான கிருஷ்ணருடைய விநாசத்தையும் அடிக்கடி நினைத்து நான் பொறுக்கவில்லை. சார்ங்கமென்னும் வில்லையுடைய கிருஷ்ணருடைய மரணத்தை, ஸமுத்திரம் வறண்டுபோவதைப்போலவும் மந்தரபர்வதம் அசைக்கப்படுவதைப்போலவும் ஆகாயம் விழுதலைப்போலவும் அக்னியின் குளிர்ச்சியைப்போலவும் நம்பத்தகாததாக நினைக்கிறேன். கிருஷ்ணரை விட்டுப் பிரிந்து இவ்வுலகில் இருக்க எனக்கு விருப்பமில்லை. தபோதனரே! இதைக்காட்டிலும் வேறான பெரிய கஷ்டத்தையும் கேளும். அதை அடிக்கடி நினைத்து என்மனம் பிளக்கப்படுகின்றது. பிராம்மணரே! பஞ்சநதத்தில் வஸிப்பவர்களான வேடர்கள் நான் பார்த்துக்கொண்டிருக்கும்போது என்னை அவமதித்து ஆயிரக்கணக்கான விருஷ்ணிகளின் மனைவி

களை அபஹரித்தார்கள். அப்பொழுது, நான் வில்லையெடுத்து அதை நாண்பூட்டத் திறமையற்றவனானேன். என் கைகளுடைய பராக்ரமமானது முன்போலிருக்கவில்லை. மஹாமுனிவரே! பலவிதமான என்னுடைய அஸ்திரங்களும் நசித்துவிட்டன. க்ஷணத்திற்குள்ளாகவே பாணங்களும் முழுதும் அற்றுப்போயின. அளவிடமுடியாதபுத்தியுள்ளவரும் சங்கத்தையும் சக்ரத்தையும் கதாயுதத்தையும் தரிப்பவரும் நான்கு கைகளுள்ளவரும் பீதாம்பரத்தைத் தரிப்பவரும் கருமை நிறமுள்ளவரும் தாமரை இதழ்போன்ற கண்களுள்ளவரும் மிகச் சிறந்த ஒளியுள்ளவருமான எந்தப் புருஷர் ரதத்தில் எனக்கு முன்னால் (இருந்துகொண்டு) பகைவரின் படைகளை எரித்துக்கொண்டு செல்வரோ அந்தக் கிருஷ்ணரை இப்பொழுது நான் பார்க்கவில்லை மிகச் சிறந்தவரே! எவரால் முதலில் தேஜஸினால் எரிக்கப்பட்ட பகைவரின் படைகளை நான் பிறகு காண்டீவத்தினின்று விடப்பட்ட பாணங்களால் கொன்றேனோ அந்தக் கிருஷ்ணரைப் பாராமல் நான் (இப்பொழுது) துயரப்படுகிறேன்; அலைகிறேன். நான் மிக்க துயரமுற்ற சித்தமுள்ளவனாகி ஆறுதலை அடையவில்லை. தேவகியின்புத்திரரும் தேவரும் வாஸுதேவரும் பிறப்பற்றவரும் பிரபுவும் ஜனார்த்தனரும் வீரருமான கிருஷ்ணரைப் பிரிந்து ஜீவித்திருக்க எனக்கு விருப்பமில்லை. விஷ்ணுவானவர் சென்றுவிட்டாரென்பதைக் கேட்டவுடன் எனக்கும் திசைமயக்கம் உண்டாயிற்று. மிகச்சிறந்தவரே! ஞாதிகளையும் பராக்கிரமத்தையும் இழந்தவனும் ஒருவருமில்லாதவனும் அலைகின்றவனுமான எனக்கு நீர் க்ஷேமத்திற்குக் காரணத்தை உபதேசிக்கவேண்டும்' என்று கூறினான்.

வியாஸர் சொல்லத் தொடங்கினர். 'தர்மத்தின் வரையறையைக் காப்பதற்காக உண்டானவர்களும் தேவாம்சங்களுமான அவர்கள் தேவர்களுக்கும் அந்தராத்மாவாயிருக்கும் தேவரான கிருஷ்ணரால் உபேக்ஷிக்கப்பட்டுச் சென்றுவிட்டார்கள். கௌரவச்ரேஷ்டனே! மஹாரதர்களான விருஷ்ணிகளும் அந்தகர்களும் பிராம்மண சாபத்தினால் எரிக்கப்பட்டு நாசமடைந்தார்கள். நீ அவர்களைப்பற்றித் துயரப்படவேண்டாம். அது அவ்வாறு நடக்க வேண்டியதே. (ஆகையினால்தான்), மஹாத்மாக்களான அவர்களுடைய இந்தத் துரதிருஷ்டத்தை விலக்கத் திறமையுள்ளவராக இருந்தும் கிருஷ்ணர் உபேக்ஷை செய்துவிட்டார். கிருஷ்ணர் சராசரஸ்வரூபமான மூவுலகங்களையும் முழுதும் வேறுவிதமாகச் செய்வதற்குத் திறமையுள்ளவர். மஹாத்மாக்களின் சாபத்தை மாற்றுவதைப்பற்றிச் சொல்லவேண்டுமா? அந்த

ஸ்திரீகளும் முன்பு பிரபாஸத்தில் கோபங்கொண்ட [1]அஷ்டாவக்ரரென்னும் முனிவரால் சபிக்கப்பட்டார்கள். அதற்காகத்தான் உனக்குப் பலம் குறைந்தது. உன்னிடத்தில் ஸ்நேஹத்தால் ரதத்திற்குமுன் சென்றவரும் சக்கரத்தையும் கதாயுதத்தையும் தரித்தவரும் புராணரிஷியும் வாஸுதேவரும் நான்கு கைகளுள்ளவரும் விசாலமான கண்களுள்ளவருமான கிருஷ்ணர் பூமியின் பாரத்தை இறக்கிவிட்டுத் தம் சரீரத்தை விட்டுவிட்டு உத்தமமான தம்முடைய ஸ்தானத்தை அடைந்தார். புருஷஸ்ரேஷ்டனே! சிறந்த கைகளுள்ளவனே! பீமஸேனனை உதவியாகக்கொண்ட உன்னாலும் நகுல ஸஹதேவர்களாலும் இப்பொழுது தேவர்களுக்குப் பெரியகாரியம் செய்யப்பட்டது. கௌரவஸ்ரேஷ்டனே! உங்களைச் செய்யவேண்டியகாரியத்தைச் செய்துமுடித்தவர்கள் என்றும் நன்கு காரியஸித்தியைப் பெற்றவர்களென்றும் நான் நினைக்கிறேன். உங்களுக்கும் செல்வதற்குக் காலம் வந்துவிட்டது. பிரபுவே! இது க்ஷேமத்தைச் செய்யக்கூடியது. பாரத! பலமும் [2]புத்தியும் [3]தேஜஸும் [4]பிரதிபத்தியும், செல்வம் உண்டாகுங் காலங்களில் உண்டாகின்றன; செல்வம் நசிக்கும்காலத்தில் நசிக்கின்றன. தனஞ்சய! உலகங்களுக்குக் காரணமான இவையெல்லாம் [5]காலத்தை மூலமாகக் கொண்டவை. காலமே (இவற்றைத்) தற்செயலாக மறுபடியும் ஸம்ஹரிக்கிறது. இவ்வுலகில் (ஒருவன்) மிக்க பலமுள்ளவனாக இருந்து மறுபடி துர்ப்பலனாவதும் பிரபுவாயிருந்து மறுபடி பிறர்களுடைய ஆஜ்ஞைக்கு உட்பட்டிருப்பதும் அந்தக் காலத்தினாலேயே. அஸ்திரங்களும் செய்யவேண்டியகாரியத்தைச் செய்துவிட்டு இப்பொழுது வந்தவிடம் சென்றுவிட்டன; மீண்டும், காலம்வரும்பொழுது உன்னுடைய கையில் வந்து சேரும். பாரத! உங்களுக்கும் சிறந்ததான கதியை அடைவதற்கு (இது) காலம். பரதஸ்ரேஷ்டனே! இதை உங்களுக்குச் சிறந்தஸ்ரேயஸாக நினைக்கிறேன்' என்று சொன்னார். அர்ஜுனன் அளவற்ற தேஜஸுள்ள வியாஸருடைய இந்த வசனத்தைத் தெரிந்துகொண்டு அநுமதிபெற்று ஹஸ்திநாபுரம் சென்றான். வீரனான அவன் பட்டணம் சென்று யுதிஷ்டிரரை அடைந்து விருஷ்ணிகள் அந்தகர்கள் இவர்களுடைய குலத்தைப்பற்றிய அந்தவரலாற்றை நடந்தபடி சொன்னான்' என்று கூறினார்.

1. இந்தக் கதை விளங்கவில்லை; இது அதிக பாடம்.
2. 'நேர்ந்திருக்கும்காரியத்தை நிச்சயம்செய்வது' என்பது பழைய உரை.
3. 'மேன் மேலும் தோற்றம் புத்தி' என்பது பழைய உரை.
4. 'வரப்போகிற காரியத்தை அறிதல்' என்பது பழைய உரை.
5. ஈச்வரனென்பது பழைய உரை.

மௌஸலபர்வம் முற்றிற்று.